# திருநெல்வேலி மாநகராட்சி

## 30.01.2023 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

## *பொருட்கள்*

1. திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 7 அம்பேத்கார் காலனி புதிய குடியிருப்பு பகுதியில் தெருவிளக்குகள் இல்லாததால் தெரு விளக்குகள் அமைத்து தரும்படி கேட்டு திருமதி.M.சரஸ்வதி என்பவர் திருநெல்வேலி மாவட்ட நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் கொடுத்த வழக்கு எண் 233/2022-ன்படி மற்றும் நிரந்தர மக்கள் நீதிமன்றம் விசாரனையின் போது அம்பேத்கார் நகர் மாநகராட்சி புதிய குடியிருப்பு பகுதிக்கு செல்லும் வழியில் மின்விளக்குகள் அமைக்க மாமன்ற தீர்மானம் பெற்று நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் 09-02-2023 அன்று அறிக்கை சமர்ப்பிக்க தெரிவித்துள்ளார்கள். அதன்படி ஏற்கனவே உள்ள 12 மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து 12 No's 40W LED விளக்குகள் அமைத்திட தமிழ்நாடு மின்வாரியத்திற்கான செலவு மற்றும் மின்விளக்குகள் அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூபாய் 2,50,000/- க்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 7 அம்பேத்கார் காலனி புதிய குடியிருப்பு பகுதியில் உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து 12 No's 40W LED விளக்கு, ஒரு தெரு விளக்கு On/Off Box அமைத்திடவும் மற்றும் மின்வாரியம் மூலம் மின் பணிகள் அமைக்கவும் மேலும் மின்விளக்குகளுக்கான உத்தேச செலவினம் ரூபாய் 2,50,000/- (Rupees Two Lakhs Fifty Thousand)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ2/4916/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 221 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

2. திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1632 எண்ணம் அடிபம்புகள் மற்றும் 274 எண்ணம் விசைபம்புகளை பராமரிக்கும் பணியானது தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மாமன்றத் தீர்மானம் எண்.19 நாள் 31.05.2021-ன்படி இரண்டு வருடங்களுக்கு அடிபம்பு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு திரு.செல்வம் என்பவருக்கு 01.06.2021 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு அன்னாரால் அடிபம்புகள் மற்றும் விசைபம்புகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்படி மேற்படி பராமரிப்பு பணிக்கான காலம் 31.05.2022ல் முடிவடைந்த நிலையில் 01.06.2022 முதல் 31.07.2022 முடிய இரண்டு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு அனுமதி பெறப்பட்டு (மதிப்பீடு ரூ.7.87 இலட்சம்) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், 01.08.2022 முதல் 31.12.2022 வரையிலான ஐந்து மாத காலத்திற்கு மேற்படி அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.19.68 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டும் புதிய நிறுவனம் தேர்வு செய்யும் வரை திரு.எஸ்.செல்வம் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் 25.7.2022 -ல் ஒப்புதல் பெறப்பட்டு பராமரிப்பு பணிகள் அன்னாரால் மேற்கொள்ளப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கவும்,

மேலும்,நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் 01.01.2023 முதல் 30.4.2023 முடிய நான்கு மாத காலத்திற்கு அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு புதிய நிறுவனம் தேர்வு செய்யும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் திரு.செல்வம் என்பவர் மூலம் அன்னார் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட விலைவிகிதத்தின்படியே பணியை மேற்கொள்ளவும் மற்றும் செலவினத் தொகையினை வழங்கிடவும் மாமன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்த காலம் 31.5.2022ல் முடிவுற்ற நிலையில்,

01.06.2022 முதல் 31.12.2022 வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.27.55 இலட்சத்திற்கும் கால நீட்டிப்புக்கான அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும், மற்றும் 01.01.2023 முதல் 30.4.2023 முடிய நான்கு மாத காலத்திற்கு அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு புதிய நிறுவனம் தேர்வு செய்யும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் திரு.செல்வம் என்பவர் மூலம் அன்னார் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட விலைவிகிதத்தின்படியே பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் பட்டியல் தொகையினை வழங்கிடவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ம.எண்.31/2022-23)

**தீர்மானம் எண்: 222 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

3. திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் தேசிய நிதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.52.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1.4.2007 முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான பாதாள சாக்கடை பம்பிங் மெயின் 12.55 கிலோ மீட்டர், கழிவுநீர் குழாய்கள் 187 கிலோ மீட்டர் , கழிவு நீரேற்றும் நிலையங்கள் நான்கு எண்ணம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று, ஆள் இறங்கு குழிகள் 7924 எண்ணங்கள் ஆகியவற்றினை இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு இம்மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை. எனவே, பாதாள சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு திரு.செல்வம் என்பவருக்கு வேலை ஆணை வழங்கப்பட்டு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு 2022-2023-ம் வருடத்திற்குரிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலை விகித அட்டவணைப்படி பணியாளர்களுக்கான (தொழில் நுட்ப பணியாளர்கள், ஓட்டுநர், மின்பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள்) ஊதியம் மற்றும் அதற்குண்டான ESI, EPF உள்ளடக்கி ஒரு வருட காலத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.61 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாததால், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு 2022-2023-ம் வருடத்திற்குரிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலை விகித அட்டவணைப்படி பணியாளர்களுக்கான (தொழில் நுட்ப பணியாளர்கள், ஓட்டுநர், மின்பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள்) ஊதியம் மற்றும் ESI, EPF, GST உள்ளடக்கி ஒரு வருட காலத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.61 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

(மதிப்பீடு எண். 30/2022-23)

## தீர்மானம் எண்: 223 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

4. திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் தேசிய நிதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.52.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1.4.2007 முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான பாதாள சாக்கடை பம்பிங் மெயின் 12.55 கிலோ மீட்டர், கழிவுநீர் குழாய்கள் 187 கிலோ மீட்டர் , கழிவு நீரேற்றும் நிலையங்கள் நான்கு எண்ணம் (Pumping Station) மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று, ஆள் இறங்கு குழிகள் 7924 எண்ணங்கள் ஆகியவற்றினை இயக்கி பராமரிக்கும் பணிகளை (01.10.2021 முதல் 31.01.2022) ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, மாமன்றத் தீர்மானம் எண்.74 நாள் 27.09.2021-ன்படி திரு.செல்வம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டு 30.09.2021 அன்று அன்னாருக்கு வேலை ஆணை வழங்கப்பட்டு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் (01.10.2021 முதல் 31.01.2022 வரை) மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாமன்றத் தீர்மானம் எண்.166 நாள் 24.01.2022 -ன்படி பிப்ரவரி மற்றும் மார்ச் 2022 வரை பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி, பாதாள சாக்கடை பராமரிப்பு பணியானது மிகவும் அத்தியாவசியமான பணியாக இருப்பதால் 01.04.2022 முதல் 30.06.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.37.35 இலட்சத்திற்கு 25.03.2022-ல் தனிஅலுவலர் அனுமதி பெறப்பட்டு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் அன்னாரால் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர், 01.07.2022 முதல் 31.10.2022 முடிய நான்கு மாத காலத்திற்கு 18.06.2022-ல் கால நீட்டிப்பு அனுமதி பெறப்பட்டு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும், மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49.80 இலட்சத்திற்கும், மேலும் 01.11.2022 முதல் 28.02.2023 முடிய நான்கு மாத காலத்திற்கு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49.80 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.99.60 இலட்சத்திற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி புதிய ஒப்பந்த நிறுவனம் தேர்வு செய்யும் வரை ஏற்கனவே பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.செல்வம் என்பவரின் மூலம் அன்னார் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட விலைவிகிதத்தின்படியே பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் பட்டியல் தொகையினை வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தக்காலம் 30.06.2022ல் முடிவடைய இருப்பதாலும், பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் தொடர்பாக போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையிலும், மேற்படி பணியானது மிகவும் அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும் மற்றும் 01.07.2022 முதல் 31.10.2022 முடிய நான்கு மாத காலத்திற்கு 18.06.2022-ல் கால நீட்டிப்பு அனுமதி பெறப்பட்டு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும், மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49.80 இலட்சத்திற்கும் மற்றும் 01.11.2022 முதல் 28.02.2023 முடிய நான்கு மாத காலத்திற்கு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49.80 இலட்சத்திற்கும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி புதிய ஒப்பந்த நிறுவனம் தேர்வு செய்யும் வரை ஏற்கனவே பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.செல்வம் என்பவரின் மூலம் அன்னார் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட விலைவிகிதத்தின்படியே பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் பட்டியல் தொகையினை வழங்கிடவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ம.எண்.29/2021-22)

## தீர்மானம் எண்: 224 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**5.** தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு **01.01.2023** முதல் **38** சத**வீ**தம் அகவிலைப்படி உயர்வு செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை (**நிலை**) எண். **7** நிதி(படிகள்)த் துறை நாள். **06.01.2023**

மற்றும் அரசாணை எண். **10** நிதி(ஓய்வூதியம்) துறை நாள். 06.01.2023. **ஆகியவை** மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுக்கின்றது.

## அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட அரசாணைகளை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.,க.எண். சி3**/365 /**2023)** (மைய அலுவலகம்)

## தீர்மானம் எண்: 225 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

---

**6.** அரசாணை (நிலை) எண்.373 நிதி (படிகள்)த் துறை நாள் 26 .12 .2022 ல் தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு 2021 – 2022 ம் ஆண்டுக்கான தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியம் வழங்கிட பிறப்பித்துள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது,

அரசாணை (நிலை) எண்,374 நிதி (படிகள்)த் துறை நாள் 26 . 12 . 2022 ல் தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்பஓய்வூதியதாரர்களுக்கு 2021 – 2022 ம் ஆண்டுக்கான தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியம் வழங்கிட பிறப்பித்துள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

## அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட அரசாணைகளை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**( ந.க.எண். சி3/ 49 /2023)** (மைய அலுவலகம்)

## தீர்மானம் எண்: 226 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

---